Ph : 04175 - 236654 I 235295

SHANMUGA INDUSTRIES
ARTS & SCIENCE COLLEGE (Co-Ed)

Certified Under Section 2(f) & 12B of UGC Act 1956, An ISO - 9001 - 2015 Certified Institution

Permanently Affiliated to Thiruvalluvar University, Vellore and Approved by the Govt. of Tamil nadu & AICTE, NewDelhi

Manalurpet Road, Tiruvannamalai - 606 603, E-Mail : shanmugacollege@gmail.com, Website : www.shanmugacollege.edu.in

# திருவண்ணாமலை சண்முகா கல்லூரியில் சர்வதேச யோகா தின விழா

திருவண்ணாமலை சண்முகா தொழிற்சாலை கலை அறிவியல் கல்லூரியும், திருவண்ணாமலை சாய் சேவா யோகா இயற்கை மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையமும் இணைந்து சர்வதேச யோகா தின விழாவினை **கூகுள் செயலி** வழியாகக் கொண்டாடின. கல்லூரியின் முதல்வர், முனைவர் பேரா.**கே.ஆனந்தராஜ்** வரவேற்புரை வழங்கினார். கல்லூரியின் தலைவர் **ஜி.புல்லையா** தலைமை தாங்கினார். முன்னிலை உரையினைக் கல்லூரியின் செயலர் மற்றும் தாளாளர் **டி.ஏ.எஸ்.முத்து** வழங்கினார். பொருளாளர் **எம்.சீனுவாசன்,** கல்விப்புல முதன்மையர் பேரா.**அழ.உடையப்பன்** உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினர்.

கல்லூரி நாட்டுநலப்பணித் திட்டத்துடன் இணைந்து வழங்கிய இந்நிகழ்ச்சியில், திருவண்ணாமலை சாய் சேவா யோகா இயற்கை மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையத்தின் முதன்மை மருத்துவர் **ப.எழில்மாறன்** அவர்கள் கூகுள் செயலி வழியாக சிறப்புரையாற்றியதோடு யோகா பயிற்சியினை வழங்கினார். தமது உரையில் கொரோனா தொற்று தொடர்பாக, பல்வேறு ஆலோசனைகளையும் வழிகாட்டு நெறிமுறைகளையும் வழங்கினார். நாட்டுநலப்பணித் திட்ட அலுவலர் பேராசிரியர் **டி.அருண்குமார்** நன்றியுரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் கல்லூரிப் பேராசிரியர்கள், அலுவலகப்பணியாளர்கள் மற்றும் பார்வையாளர்கள் கூகுள் செயலி வழியாகக் கலந்து கொண்டனர்.

தாளாளர்